ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நிதியியல் உளவறிதல் பிரிவு

திகதி 2023 மே 09

## 2022 நவெம்பர் 17 தொடக்கம் 2023 மாச்சு 31 வரை நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான இணங்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் நிருவாக ரீதியான தண்டப் பணங்களை விதித்தல்/சேகரித்தல்

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 19(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்களின் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. நிதியியல் நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற் கொண்டு தண்டப்பணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2022 நவெம்பர் 17 தொடக்கம் 2023 மாச்சு 31 வரையான காலப்பகுதியில் கீழேகாட்டப்பட்டவாறு, மொத்தமாக ரூ.5.5 மில்லியன் கொண்ட தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணங்களாக சேகரிக்கப்பட்ட நிதி திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டன.

**1. பிரதேச அபிவிருத்தி வங்கி**

**விதிப்புத் திகதி** : 2023 பெப்புருவரி 21

**தொகை** : ரூ. 500,000.00 (ரூபா ஐந்து இலட்சம்)

**கொடுப்பனவுத் திகதி** : 2023 மாச்சு 21

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

தடைகளைப் பரிசோதனைசெய்தல் மற்றும் அடகு ஏலக் கொள்வனவாளர்களுக்கான வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை நடாத்துதல் என்பன தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தையும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்)

விதிகளையும் கடைப்பிடிப்பதற்கு தவறியமைக்காக நிருவாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது. சேவை வழங்கத் தொடங்கும் நேரத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்களுக்கெதிராக தனிப்பட்ட வாடிக்கையாளர்களைப் பரிசோதிப்பதற்கும், பெயர்குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது நிறுவனங்களின் அனைத்து தொடர்புடைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்களைப் பேணுவதற்கும் அதேபோன்று இற்றைப்படுத்தப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் மூலம், அல்லது ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது தனிப்பட்டவர்களுடன் தொடர்புபட்ட தொழில் உறவுகள் எதுவும் வைத்திருக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்வதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்கள் இற்றைப்படுத்தப்படும் போது, ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் தளத்தைப் பரிசோதிப்பதற்கு ஏதேனும் பொறிமுறையை நிறுவுவதற்கும் வங்கி தவறியிருந்தது. முறைமைகளிலும் நடைமுறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், பிரதேச அபிவிருத்தி வங்கியினால் பேணப்படுகின்ற பெயர்குறிக்கப்பட்ட தனியாட்களுடனான அல்லது நிறுவனங்களுடனான தொழில் உறவுகள் பற்றிய நிகழ்வுகள் தளங்களைப் பரிசோதனை செய்கின்ற போது வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன வழிமுறைகளை நடாத்துவதற்கும் 2022.05.28 அன்று இடம்பெற்ற அடகு ஏலக் கொள்வனவாளரொருவரிடமிருந்து அடையாள ஆவணப் பிரதியொன்றையும் பெற்றுக்கொள்வதற்கும் வங்கி தவறியிருந்தது.

## 2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுறவு வங்கி

**விதிப்புத் திகதி** : 2023 பெப்புருவரி 21

**தொகை** : ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2023 மாச்சு 21

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

தடைகளைப் பரிசோதனைசெய்தல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடலுடன் தொடர்புடைய நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்துடனும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளுடனும் இணங்கியொழுகுவதற்கு தவறியமைக்காக நிருவாக ரீதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டது. பெயர்குறிக்கப்பட்ட ஆட்களின் அல்லது நிறுவனங்கள் பற்றிய அனைத்து தொடர்புடைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்களைப் பேணுவதற்கும், இற்றைப்படுத்தப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் மூலம், அல்லது ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது தனிப்பட்டவர்களுடன் தொடர்புபட்ட தொழில் உறவுகள் எதுவும் வைத்திருக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்வதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்

சபை தீர்மானங்கள் பட்டியல்கள் இற்றைப்படுத்தப்படும் போது, ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் தளத்தைப் பரிசோதிப்பதற்கு சேவை வழங்கத் தொடங்கும் நேரத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் பற்றிய அனைத்து தொடர்புடைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்களைப் பரிசோதிப்பதற்கும் அதேபோன்று ஏதேனும் பொறிமுறையை நிறுவுவதற்கும் வங்கி தவறியிருந்தது. முறைமைகளிலும் நடைமுறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுறவு வங்கியினால் பேணப்படுகின்ற பெயர்குறிக்கப்பட்ட தனியாட்களுடனான அல்லது நிறுவனங்களுடனான தொழில் தொடர்புகள் பற்றிய நிகழ்வுகள் தளங்களைப் பரிசோதனைசெய்கின்ற போது வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், வங்கியானது ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) விஞ்சுகின்ற அடகுவைத்தல் மற்றும் அடகு ஏல கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு தவறியிருந்தது.

**3. செலான் வங்கி பிஎல்சி**

**விதிப்புத்திகதி** : 2023 பெப்புருவரி 21

**தொகை** : ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2023 மாச்சு 21

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

தடைகளைப் பரிசோதனைசெய்தல் செய்தல் தொடர்பில் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகளுடன் இணங்காமைக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. சேவை வழங்கத் தொடங்கும் நேரத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்களுக்கெதிராக வாடிக்கையாளர்களைப் பரிசோதிப்பதற்கு வங்கி தவறியிருந்ததுடன் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவருடன் (பராயமடையாதவர் கணக்கொன்றின் பாதுகாவலர்) வங்கித் தொழில் தொடர்பை நிறுவி பேணிவருகின்றமையினால், ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் தளத்தை பரிசோதிப்பதற்கும் வங்கி தவறியிருந்தது.

**4. சம்பத் வங்கி பிஎல்சி**

**விதிப்புத்திகதி** : 2023 பெப்புருவரி 23

**தொகை** : ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2023 மாச்சு 09

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

முறையாக முன்னெடுக்கப்படும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தை நடாத்துதல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியமைக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வங்கியானது வாடிக்கையாளர் முகக்குறிப்பிலிருந்து மாறுபட்ட அத்துடன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைத் திரட்டுவதைப் பரிசீலனையில் கொண்டு, நான்கு கணக்குகளுக்கான கொடுக்கல்வாங்கல் விதங்களை அடையாளங்காண்பதற்கும் வருமான மூலங்களை சரிபார்ப்பதற்கும் தவறியிருந்தது.

5. **ஹட்டன் நெஷனல் பாங்க் பிஎல்சி**

**விதிப்புத்திகதி** : 2023 பெப்புருவரி 23

**தொகை** : ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2023 மாச்சு 09

**தண்டப்பணம் விதிக்கப்பட்டதற்கான காரணம்:**

முறையாக முன்னெடுக்கப்படும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தை நடாத்துதல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியமைக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வங்கியானது வாடிக்கையாளர் முகக்குறிப்பிலிருந்து மாறுபட்ட அத்துடன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையைத் திரட்டுவதைப் பரிசீலனையில் கொண்டு கணக்கொன்றுக்கான கொடுக்கல்வாங்கல் விதங்களை அடையாளங்காண்பதற்கும் வருமான மூலங்களை சரிபார்ப்பதற்கும் தவறியிருந்தது.

6. **மக்கள் வங்கி**

**விதிப்புத்திகதி** : 2023 பெப்புருவரி 23

**தொகை** : ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2023 மாச்சு 07

**தண்டப்பணம் விதிக்கப்பட்டதற்கான காரணம்:**

முறையாக முன்னெடுக்கப்படும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தை நடாத்துதல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவன விதிகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியமைக்காக

நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வங்கியானது வாடிக்கையாளர் முகக்குறிப்பிலிருந்து மாறுபட்ட அத்துடன் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையைத் திரட்டுவதைப் பரிசீலனையில் கொண்டு கணக்கொன்றுக்கான கொடுக்கல்வாங்கல் விதங்களை அடையாளங்காண்பதற்கும் வருமான மூலங்களை சரிபார்ப்பதற்கும் தவறியிருந்தது.